**சி.பி.எண்.20/2020** 09.01.2026

**மனுதாரர்.த.சாட்சி 1 சியாமளா குறுக்கு விசாரணை**

நான் 1994-ம் வருடம் 6-ம் மாதம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தேன். நான் பணியில் சேர்ந்ததற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. நான் மாதம் சம்பளம் பெற்றதற்கான ரசீதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் போனஸ், சம்பளம், சர்வீஸ் தொகை மற்றும் எதிர்மனுதாரர் அளித்த காசோலைக்கான தொகையை கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். ம.த.சா.ஆ.1 மற்றும் ம.த.சா.ஆ2-ல் காணப்படும் கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் ராஜினாமா கடிதத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது **எ.ம.த.சா.ஆ.1**. நிறுவனம் 30.09.2019 அன்று தொழிலில் நலிவு ஏற்பட்டதால் மூடப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய ராஜினாமா கடிதத்தில் எனக்கு சேர வேண்டிய இறுதி தொகையை கொடுக்கும்படி நான் நிர்வாகத்திடம் கேட்டு அதன் விவரத்தை அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ம.த.சா.ஆ2-ல் எனக்கு என்னென்ன தொகை சேர வேண்டும் என்று நிர்வாகம் கூறியதை நான் ஒப்புக்கொண்டு தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். நான் என் மனுவில் கோரியிருக்கும் நீக்கப்பட்ட தொகை மற்றும் ஒரு மாத சம்பள அறிவிப்பு தொகையை பற்றி மனுதாரர் தரப்பு சான்று 2-ல் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 2018 மற்றும் 2019 ஆண்டிற்கான போனஸ் தொகையாக ரூபாய் 61,740 நான் கோரியுள்ளேன் என்றால் சரிதான். போனஸ் தொகையை வருடம் முடிந்த பிறகு தான் அளிக்கும் வழக்கம் உள்ளது என்றால் சரிதான். நான் கோரியுள்ள உள்ள போனஸ் தொகையை அளிப்பதற்கு இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது என்றால் சரியல்ல. ஈட்டிய விடுப்பு தொகையாக எனக்கு ரூபாய் 9,700 தான் சேரவேண்டும் என்றும் ஆனால் நான் அதிகப்படியாக ரூபாய் 15,190 கோரியுள்ளேன் அது எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள 12(3) ஒப்பந்ததத்தின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பிரமான வாக்குமூலத்தில் ஒவ்வொரு தலைப்பின் கீழும் நான் அதிகப்படியான தொகையை கோரியுள்ளேன் அது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. தொழிற்சாலை நலிவடைந்த காரணத்தினால் நானாகதான் ராஜினாமா செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நிர்வாகம் என்னை பணிநீக்கம் செய்யவில்லை என்றும் கம்பெனி மூடப்பட்டதால் நானாகதான் ராஜினாமா அளித்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கோரியுள்ள தொகை அதிகப்படியானது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.01.19 14:27:04 +0530